D.V.No. 15/2022
நாள்: 11.03.2024
நேரம்: 05.35

R.W– 1: சரண்ராஜ் , த/பெ. தேவதாஸ்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ., வரை படித்துள்ளேன். எந்த வருடம் முடித்தேன் என்றால் 2011ம் வருடம். நான் மனுதாரரை விருப்பப்பட்டு தான் திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல, எனக்கு விருப்பம் இல்லை, அப்பா அம்மா திருமணம் சொன்னதால் தான் திருமணம் செய்தேன். எனது திருமணத்தின் போது ஊர் பெரியவர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். மனுதாரரின் வீடும், எனது வீடும் அடுத்தடுத்த வீடு என்றால் சரிதான், சிறுவயதில் இருந்தே மனுதாரரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு வந்த பெரியோர்கள் முன்னிலையில் எனது தாய் தந்தையர் சொன்னதின் பேரில் தான் மனுதாரை திருமணம் செய்கிறேன் எனக்கு இத்திருமணத்தில் விருப்பம் இல்லை, திருமணத்தை நிறுத்துங்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை. திருமண உறவில் இணைய போகும் இரு நபர்களில் ஒருவருக்கு அத்திருமணத்தில் விருப்பம் இல்லாமல் இருந்தால் அத்திருமண உறவானது நரகமாக மாறிவிடும் என்றால் சரிதான். நான் விருப்பம் இல்லாத நிலையில் மனுதாரரை திருமணம் செய்து அவரது வாழ்க்கையை அழித்துவிட்டேன் என்றால் சரியல்ல.

மனுதாரரிடம் இருந்து விவாகரத்து கோரி நான் தான் முதன் முதலில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், மனுதாரர் எனக்கு எதிராக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்ததால் மனு தாக்கல் செய்தேன். நான் விவாகரத்து மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை தான் இந்த மனுவின் எதிருரையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது விவாகரத்து மனுவில் மனுதாரருக்கு எதிராக நான் குறிப்பிட்ட விவரங்களை நீதிபதி ஏற்றுக் கொள்ளாமல் மேற்படி மனுவை தள்ளுபடி செய்தார் என்றால் சரிதான். நானும், மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்த போது மனுதாரருக்கு எதிராக நான் கூறிய குற்றச்சாட்டுகளை குடும்ப நல நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் மனுவை தள்ளுபடி செய்தார் என்றால் சரிதான். நான் மனுதாரரின் 27 பவுன் நகைகளை வாங்கி அடமானம் வைத்தேன் என்றாலும் அதை இந்நீதிமன்றம் மூலமாக மனுதாரரிடம் ஒப்படைத்தேன் என்றாலும், அடமானம் எதுவும் வைக்கவில்லை, வீட்டில் மனுதாரரின் பீரோவில் தான் இருந்தது. அதை தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

நான் தற்போது எங்கே என்ன வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்றால் இராமேஸ்வரத்தில் ஜூஸ் கடையில் வேலை பார்க்கிறேன். நான் எவ்வளவு நாட்களாக வேலை செய்கிறேன் என்றால் 6 மாதங்களுக்கு மேலாக திட்டக்குடியில் உள்ள ஜூஸ் பாய்ண்ட்–ல் வேலை செய்கிறேன், அக்கடையின் உரிமையாளர் விக்னேஷ். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை நான் எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 08.01.2024 ல் தாக்கல் செய்தேன். நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்த தேதியில் நான் ஜூஸ் கடையில் தான் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் திட்டகுடியில் உள்ள ஜூஸ் பாய்ண்ட்–ல் வேலை செய்வதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரருக்க ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்பதற்காக தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடங்களில் வேலை பார்ப்பதாக குறிப்பிட்டு வருகிறேன் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.** )

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.03.11 18:44:21 +0530